செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

பிரதி விலை: சதம் 10.

[புத்-எகூ] யாழ்ப்பாணம்:- பிலவங்க௵ ஐப்பசி௴ ௩௨ வெள்ளிக்கிழமை (20-10-1967) [இல-உ அ]

JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY
OCT 24

## செம்மையான உள்ளம் இறைவனை உணரவுதவும்

—திரு. த. சிவப்பிரகாச பிள்ளை

இப்பொழுதுள்ள அதிபருடைய சேவையை நாங்கள் பாராட்டுதல் வேண்டும். நான் இக் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் கல்லூரிக்கு அருகாமையில் விளையாட்டு நிலமில்லை அப்பொழுது நாங்கள் முற்றவெளி விளையாட்டு நிலத்துக்குப் போகவேண்டியிருந்தது. இப்பொழுதுள்ள மாணவர்கள் ஒலிபெருக்கி, ரெலிவிஷன, ரேப் றெக்கோட் முதலிய நவீன சாதனங்களைக் கல்விப் பயிற்சிக்கு உபயோகஞ் செய்யக்கூடிய வசதிகளுண்டு.

கல்வியின் பயிற்சியினுல் ஒருவன் தன் காலில் நடப்பவனுக விளங்கவேண்டும. சர்வகலாசாலைக் கல்வியினுல் மாணவர்கள் உத்தியோகம் பெறுதல் முடியாத காரியம். ஒவ்வொருவரும் தன்னுடைய ஆற்றலுக்கேற்ற தொழிலைப் பயின்றுகொள்ளுதல்வேண்டும். முற்காலத்தில் தகப்பனுடைய தொழிலை மகனும் பயின்றுவந்தான். அதனுல் நாட்டில் மக்கள் சோம்பேறிகளாய்த் திரியத் தேவையில்லா திருந்தது. அமெரிக்காவில் சிறந்த விவேகிகள் தொழில் துறையில் கடமையாற்றுகின்ருர்கள். சாதாரண விவேகம் உள்ளவர்களே சர்வகலாசாலைக் கல்வியை நாடுகின்ருர்கள். கிமிலெட் 'ஹென்றிபோட்' போன்ற பிரபுக்கள இதற்கு உதாரணமாக விளங்குகின்றனர்.

மாணவர்கள் தேவாரம் ஓதுவதைக் கேட்க நமது மனம பரவசமடைந்தது. சமயக கல்வி மிகவும் இன்றியமையாதது. கடவுள் அங்கு இங்கு எனுதபடி எங்கும் நிறைந்திருக்கின்ருர். எங்களுடைய மனதைச் செம்மை செய்து பக்குவமாக்கினுல் நாம் அவரை உணரலாம். இசை எங்கும் நிறைந்திருக்கின்றது. ஒரு றிருன் லிஸ்றரை நமது காதுடன் சேர்த்தால் அதன் உதவியுடன் விண்ணிலுள்ள இசையை உணருகின்ரேும். சர்வகலாசாலையில ஒரு முருகன் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கினறது. இந்துக்களுக்கு ஒரு ஆலயம் இல்லாதகுறை இதனுல் நீங்குகின்றது.

திரு. பே. கனகசபாபதியும் பிரம்மஸ்ரீ: கைலாசநாதக் குருக்களும் இச் சிவகைங்கரியத்தில சிறந்த ஊக்கமெடுத்து உழைக்கின்ருர்கள. இந்துக்கள் யாவரும் இச் சிவப்பணியை ஆதரித்தல் வேண்டும். இவ்வாறு யாழ். இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. த. சிவப்பிரகாசபிள்ளை அவர்கள் தமதுரையின்போது கூறினர்.

* * * *

## விஞ்ஞானக்கல்வியுடன் மனிதவியல் கல்வியும் இணையவேண்டும்

[ 17-10-67 ல் நடைபெற்ற யாழ், இந்துக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில இக் கல்லூரி அதிபருடைய அறிக்கையிலிருந்து அநுவதிக்கப் பட்டது. ]

எட்டாம்வகுப்புச் சித்தி எய்தியதும் தம் பிள்ளைகளுக்கு விஞ்ஞானப் பிரிவில இடம்தேடிப பிடித்தலே பெற்ரேரின இனறைய மிகப் பெரும் பிரச்சினையாய் உள்ளது. பயனுள்ள அறிவு என்னும்பொழுது அதில் விஞ்ஞானமே முதலிடம வகிக்கின்றது எனபதை நாமும் ஏற்றுக கொள்கின்ரேம. ஆனுல மாணவா சமூகத்திறமை பெறவும, சிறந்த குடிமக்களாக வாழவும ஏற்ற பயிற்சியும அளிக்கப்படுதல வேண்டும். ஆராய்ந்து பார்த்தால இதுவே மிகவும அவசியம எனபது புலப்படும் எனவே மாணவா யாவரும விஞ்ஞானக் கல்வியோடு மனிதவியலையும் சாதாரணதர வகுப்புவரை கறபதற்கான வாய்ப்புக்கள அளிக்கப்படுதல வேண்டும். விஞ்ஞானத்திற்கே முதன்மை அளித்து மனிதவியற் கல்வியைப் புறக்கணிப்பது மாணவருள் ஒரு பகுதியினரை—மனிதவியலாகிய கலைத்துறையைக் கற்போரை—ஒன்றற்கும் பயனற்ற பேதையராய் ஆக்குவதாகவே முடியும்.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

உ
சிவமயம்

கனகமா வயிரமுந்து மாமணிக்
கயிலை கண்டு
உனகனுயர்க்கனேடி யெடுத்தலு
முமையாளஞ்ச
அனகனுய் நின்றவீச னூன்றலு
மலறி வீழ்ந்தான்
மனகனூ யூன்றி னுனேல்
மறித்து நோக்கில்லை
யன்றே.

-திருநாவுக்கரசு சுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

நம் மேல் அன்பு இல்லாதவர்கள் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாயே இருத்தல் வேண்டும்.

### விஜயதசமி விழா

நல்லூர் ஆசிரிய கலாசாலை இந்துமாமன்றத்தின் சார்பில் 13-10-67 வியாழன் காலை 8 மணியளவில் விஜயதசமி விழாவை முன்னிட்டு விசேட பூசையும் - பஜனையும் நடைபெற்றது.

மன்றப் போஷகர் திரு. K. S. நடராஜா அவர்கள் தலைமையுரையில் மன்றத்தின் பணிகள்பற்றியும், தேவி வழிபாட்டின் மகத்துவம் பற்றியும் குறிப்பிட்டார்.

திருமதி இரத்தின நவரத்தினம் அவர்கள் சக்தி அருள்பற்றிக் குறிப்பிடும்போது, "சத்திவழிபாடு எல்லோருக்கும் அவசியமானது. உலகமே சத்தியால் இயங்குகின்றது. ஆசிரியர்களாகிய நீங்கள் சக்தி வழிபாட்டின் பெருமையினுல் ஒளிபெற்றுச் சென்றவிடம் எல்லாம் அருள்ஒளி வீசச் செய்யுங்கள். தாய்மை, வாய்மை, நேர்மை மூன்றினையும் கடைப்பிடித்து நடவுங்கள். நாட்டிற்கு நல்ல சேவை செய்ய வேண்டியவர்கள் ஆசிரியர்களே. பயிற்சிபெற்று வெளியேறப் போகும் நீங்கள் சமய வாழ்வு வாழ்ந்து நலல உபதேசங்களை மாணவர்களுக்கு உபதேசியுங்கள்" என்று குறிப்பிட்டார்.

பண்டிதர் இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் கலாசாலை ஆசிரிய மாணவர்களின் கவியரங்கும் இடம்பெற்றது.

## திருவாவடுதுறை மகா சந்நிதானம் அவர்கள் பரகதி சேர்ந்தனர்

திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்தோராவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் செப்டம்பர் மாதம் 23-ந் தேதி பரகதியடைந்தனர். பதினேழு ஆண்டுகளாகத் தமது ஆட்சிக்காலத்தில் சிறந்த நூல்களை ஆதீன அச்சகத்தில் வெளியிட்டுள்ளார். விநாயகர், முருகன், நடராஜர் தத்துவங்களும் வழிபாட்டு முறைகளும் அடங்கிய தனித்தனி நூல்களும், புராணங்களும் திருவாசக உரையும், வேறுபல சமய சம்பந்தமான நூல்களும் மகாசந்நிதானத்தால் வெளியிடப் பெற்றன.

ஆண்டுதோறும் அவருடைய முயற்சியினுலே திருமந்திர மகாநாடு நடைபெற்றுவந்தது. அவர் புரிந்த அறப்பணிகள் அளப்பில. ஆடம்பரமற்ற முறையில் கடமையாற்றி மக்களுடைய அன்பையும் நன் மதிப்பையும் பெற்றவர். தாம் பரிபூரண நிலையை அடைய மூன்று தினங்களுக்குமுன் பெரிய பூசை ஒடுக்கச் சுவாமிகளை அழைத்துத் தமக்குரிய இளவரசாக்கி 'அம்பலவாண தேசிகர்' என்ற தீக்ஷா நாமமும் கொடுத்து ஞானபிஷேகம செய்தார்கள். தமிழும் சைவமும் தழைக்க அருந்தொண்டாற்றியசுவாமிகள தமிழ்மக்கள் உள்ளத்தில் என்றென்றும் உறைந்திருப்பார்.

ஈழத்தின்து ஐந்தாங் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததும் இந்த ஆதீனமே யென்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். பொதுசன நூல்நிலைய முகப்பில் யாழ் நங்கையை நிறுவுதலுக்கு ஆட்சேபம்

"தமிழ் மக்களுடைய கலைத் தெய்வமாகிய சரசுவதிதேவியின் திருவுருவத்தை முன்னர் செய்துள்ள ஏற்பாட்டின்படி யாழ். மாநகர போதுசன நூல்நிலைய முகப்பில் நிறுவிவிட்டு, பின்பு இந்துக்களல்லாத சிலருடைய தலையீட்டினுல் ஆணையாளர்கள் நான்கு கரங்களில இரண்டினை அகற்றிவிட்டு, "யாழ் நங்கை" யென்ற நாமத்துடன் ஒரு சிலையை நிறுவினதையிட்டு இச் சபை பெரிதும கவலையடைவதுடன் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கும், கௌரவ தலத்தாபன மந்திரியவர்களுக்கும தனது ஆட்சேபத்தைத் தெரிவிக்கின்றது."

நாயன்மார்கட்டு, யாழ். சைவசமய அபிவிருத்திக்கழகம் 16-10-67 -ல் இத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

x x x

வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றம, (யாழ்ப்பாணம்) மன்றத்தலைவர் திரு வை. இரகுநாதமுதலியார் M;Sc. அவர்கள் தலைமையில 18—10--67 புதன்கிழமையன்று கூடிய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற் குறிப்பிட்டதுபோன்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதுடன், சரஸ்வதி தேவியின் சிலையையே அங்கு உடனடியாக நிறுவும்படியும், இத் தீர்மானத்தை கௌரவ தலதாபன அமைச்சரவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர், சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் அனுப்புவதெனவும், தேவையேற்பட்டால், திறப்பு விழாவன்று பகிஷ்கரிப்பு இயக்கம் போன்றவற்றை நடாத்துவதுபற்றி பின்பு ஆராய்வதெனவும், அத்தோடு வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

x x x

சரஸ்வதி தேவியின் திருவுருவைச் சிதைத்து கரங்களில் இரணடை ஒடித்தெடுத்து, நவீன "யாழ் நங்கை" சிலை நிறுவுவதை வன்மையாக்ள திர்ப்பதுடன், தமிழ் மக்களுக்கு இச் சம்பவத்தை விளக்கவேண்டும் என்னும் தீர்மானம் புன்னாலைக்கட்டுவன் கிராமமுன்னேற்றச்சங்கத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ந.—தி.)

# இந்து சாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே ஆழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

பிலவங்கஞு ஐப்பசி மீ ௩-௨ வெள்ளிக்கிழமை [1967]


## இது முறையான செயலாகுமா ?

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையம் சிறந்த முறையில் அமையவேண்டும் என்ற நோக்குடன் முன்னாள் வடமாகாண அதிபர் திரு: ஹட்சன் அவர்கள் காலத்தில், இவரையே தலைவராகவும், அக்காலம் யாழ்நகர் காரியதரிசியாகவிருந்த திரு: ரி. முருகேசம் பிள்ளை அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்ட யாழ்-விநோத களியாட்டுவிழாச்சபை நிறுவப்பட்டது. பொருள் சேர்த்தலாரம்பமாகிச், சேர்ந்த பொருள் யாழ்-மாநகரசபையிடம் சாதன மூலம் ஒப்படைக்கப் பட்டது.

புதுடில்லிப் பல்கலைக்கழக நூலகத்துறைப் பேராசிரியர், டாக்டர்: எஸ். அரங்கநாதனும், திராவிடச் சிற்பக்கலை நிபுணர் திரு: நரசிம்மனும யாழ்-மாநகர சபையின் வேண்டுதற்கிணங்கி இங்கு வந்து நூல்நிலையக் கட்டடத்திற்குரிய திட்டப் படத்தினையும் தயாரித்துதவினர். 1956-ஆம் ஆண்டளவில் கட்டடவேலை ஆரம்பமாயிற்று. கோபுரங்கள், சிகரங்கள், உட்பட ஒருபகுதி வேலை இப்பொழுது இனிது முடிந்திருக்கின்றது. தொடர்ந்து வேலை நடக்கின்றது. வாசிகசாலை முகப்பில் முன்னர் செய்த ஏற்பாட்டின்படி கல்விக்கரசியாகிய சரசுவதி தேவியின் திருவுருவம் நிறுவப்பெற்றது. ஆனால் ஒருசில் இந்துக்களல்லாதாருடைய, தலையீட்டினால் சரசுவதி தேவியின் திருவுருவம் அகற்றப்பட்டு இருகரங்களையுடையதாக எந்தக் கலாசாரத்திற்கும் ஒவ்வாத "யாழ் நங்கை" என்ற பெயருடைய நவீன மங்கையின் சிலையொன்றினை அமைத்துள்ளனர்.

சரசுவதி தேவி கல்விக்கரசி. மக்களுக்கு ஞானத்தை அளிக்குந் தெய்வம். இந்துக்களால் மாத்திரமல்ல; பௌத்தவர்களாலும் பிற மதத்தவர்களாலும் வழிபடுகின்ற தெய்வம். ஈழநாட்டில் தமிழர்களுடைய கலாசாரத்துக்கும், நாகரீகத்நிறகும் தலைமைப் பீடமாகவுள்ள யாழ் நகரில் அவர்களுடைய கல்விக்கரசியாகிய கலைவாணியின் திருவுருவம் இவ்விதம் அவமதிக்கப்படுதல் பெரும் அபாரதமாகும். இச்செயல் பொதுவாகத்தமிழர்களுக்கும், சிறப்பாக இந்துக்களுக்கும் செய்யும்பெரிய துரோகமாகும். சரசுவதி தேவியின் உறுப்புக்களின் தத்துவங்களை நன்கு அறிந்த எவரும் கலைவாணியின் திருவுருவத்தை நிறுவுவதற்கு மனப்பூர்வமாக இணங்குவர்.

ஆணையாளர்களுடைய செயலை ஆட்சேபித்து யாழ் சைவபரிபாலனசபைத் தலைவர் திரு: த. முத்துசசாமிப்பிள்ளை அவர்களும், திரு: ஜி. ஜி. பொன்னம்பலம் (யாழ்- பா. உ.) அவர்களும பிரதம மந்திரி அவர்கட்கும் ஆணையாளர்கட்கும கடிதங்கள் அனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மையோர் இந்துக்கள். அவர்களும் பெரும்பாலான கிறிஸ்தவர்களும் பௌத்தர்களும் கலைவாணியின் திருவுருவத்தை நிறுவுவதை ஆதரிப்பார்கள். ஆகவே மாநகர சபை ஆணையாளர்கள் முன்னர்ச் செய்த ஏற்பாட்டின்படி நூலக முகப்பில் கலைவாணியின் திருவுருவத்தை நிறுவிப் பொதுவாக ஈழநாட்டு மக்களதும் சிறப்பாக யாழ். நகர வாசிகளதும் நன்மதிப்பைப் பெறுவார்களாக.

*

### நற் சிந்தனை

வித்திலிருந்து மரம் உண்டாவதுபோல் சிந்தனையிலிருந்து செயல் உண்டாகின்றது. நல்ல வித்து நல்ல மரத்தையும் விஷத்தன்மையுள்ள வித்து விஷத்தன்மையான மரத்தையும் உண்டுபண்ணும். அதேபோல் தீய சிந்தனை தீய செயலையும் நல்ல சிந்தனை நல்ல செயலையும் உண்டுபண்ணும்.

## தமிழ்நாடு தேய்வீகப் பேரவையின் 40 நாள் சமயப் பிரசாரப் பூர்த்தி விழா

—————0—————

["இந்துசாதனம்" அபிமான நிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

தமிழ்நாடு தெய்வீகப் பேரவைக்கு 2 ஆவது முறையாகவும் ஏகமனதுடன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25 ஆவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு வரவேற்பு விழாவும் பேரவையின் முதல்சுற்றுலா 40 நாள் சமயப் பிரசாரத்தின் நிறைவு விழாவும், சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் நகரமக்கள் சார்பாக பிர்ம்ம ஸ்ரீ கே. எஸ். கல்யாணசாமி தீக்ஷிதர் அவர்கள் தலைமையில் சிறந்த முறையில் புரட்டாசி மீ 1-ம் தேதி அன்று நடைபெற்றது.

ரூபாய் 50 ஆயிரம் செலவில ஆதீனத்தின் ஸ்தாபகரான ஸ்ரீ குருஞானசம்பந்தரின் நினைவால் திருமடாலயம் கட்டப்பட்டு திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித தம்பிரான் சுவாமிகளால் குருமணிகளின் முன்னிலையில் திறந்து வைக்கப் பட்டுள்ள ஸ்ரீ குருஞான சம்பந்தர் மடாலயத்திலிருந்து வெள்ளி நாற்காலிச் சிவிகையில் குருமணிகளை எழுந்தருளச் செய்து ஆதீனத்தம்பிரான் சுவாமிகள் புடைசூழ திருமுறைப் பாராயணத்துடன் வெகு அலங்காரமாக நகரமக்கள் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்குப் பட்டணப் பிரவேசமாக அழைத்துக் கொண்டு வந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள் கீழ்சந்நிதியில் எழுந்தருளியபோது குருமணிகளின் பிரதான சீடர்களில் ஒருவரான சின்னப்பண்ணை ஸ்ரீ. எம். இராமலிங்கம் பிள்ளை பூர்ண கும்பத்துடன் எதிர்கொண்டு குதூகலமான வரவேற்புகள் அளித்து ஸ்ரீ நடராஜர் கோயிலுக்குள் அழைத்துச் சென்றார்.

குருமணிகள் கிழக்கோபுரத்திற்குள் பிரவேசமானதும் தேவஸ்தானக் காரிய தரிசி பிர்ம்ம ஸ்ரீ மகாசிதானந்த தீக்ஷிதர், பொது தீக்ஷிதர்களுடன கூடி 21 அதிர் வெடிகள் பலமுறை போட்டு நாதசுர கோஷங்களுடன் மாலை அணிவித்து எதிர்கொண்டு வரவேற்று ஸ்ரீ நடராஜ மூர்த்தி சந்நிதிககு அழைத்துச் சென்றார்கள்.

உடன் வந்த திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகளையும் ஸ்ரீ நடராஜர் சந்நிதியின் முன்னுலுள்ள பஞ்சாக்ஷரப் படியான வெள்ளிப்படியில் அழைத்து ஸ்ரீ சிவமாகசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு விசேட அர்ச்சனைகள், ஆராதனைகள் செய்து குருமணிகளுக்கும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளுக்கும் பிரசாதங்கள் வழங்கி 21 அதிர் வெடிகளுடனும். நாதசுரக் கோஷங்களுடனும் விலை உயர்ந்த பொன்னுடைகள் போர்த்தி மாலைகள் அணிவித்து பொது தீக்ஷிதர்களின் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தில்லைப்பெருங்கோயில்(நடராஜர் கோயில்) சுற்றுமதிற் சுவர் திருப்பணி செய்வதற்காகத் திருப்பணிக் கமிட்டியார் "பிறந்தநாள் வழிபாட்டு பேரறத் திட்டப்படி ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 125/- சந்தா வழங்கி குருமணிகள் (ஞானபீடம் ஏற்றுக்கொண்ட சதய நட்சத்திரத்தன்று) அர்ச்சனையைத் துவக்கம்செய்து வைத்து, புரட்டாதி மீ 1-ந் தேதியன்று ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் பிறந்தநாள் வழிபாட்டு அர்ச்சனையையும் குருமணிகள் நடாததி வைத்தார்.

### வரவேற்புவிழா வைபவங்கள்

பிரபல சாகித்திய கர்த்தாவும் "வானொலி"ப் பாடகருமான பிர்மஸ்ரீ டி. நடராஜ தீக்ஷிதர் மங்கள இசை ஓதிய பின்னர், குருமணிகளைப் பற்றித் தாம் சாகித்யம் செய்துள்ள பாடல்களை இன்னிசையுடன் பாடிச் சமர்ப்பித்தார்.

நகரமக்கள் சார்பில் பாடியுள்ள பாடலை "இசையரசு" திரு, எம், எம். தண்டபாணி தேசிகர் பாடிச் சமர்ப்பித்தார்.

### வரவேற்புப் பிரசங்கம்

குருமணிகளின் பிரதம சீடர்களில் ஒருவரான பிரதம வைத்தியர் சிதம்பரம் திரு கே. அரங்கசாமிப் பிள்ளை பொதுமக்கள் சார்பாக வரவேற்புரை கூறுகையில் குருமணிகள் தவச்சக்ரவர்த்தியென்றும் அருளேயுருவானவரென்றும் கூறினார்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் குருமணிகளைப் பெரிதும் பாராட்டி உரைநிகழ்த்தித் தருமை ஆதீனம ஞானப் பண்ணையாகவே காட்சியளிக்கின்றது. ஞானப்பண்ணையில் மலையும்-முத்துமே விளைகின்றது. எல்லோரும் தினமும் "சிவாய நம" என்று சொல்லிக்கொண்டு வரவேண்டும் என நவின்றனர்.

தொடர்கையில் குருமணிகளுக்கு இங்கு வரவேற்பு அளிப்பதில் பயனில்லை, ஆகாசபுவனமாகிய இந்தக் கோயில எல்லோருக்கும் சொந்தம். பொன்னம்பலத்தை எல்லோரும் பாதுகாத்து வரல் வேண்டும், அணுக்கத் தொண்டும் பூசையும் செய்து கொணடு வருகின்ற தில்லைவாழந்தணர்களுக்கு கோபுரவாசலின் சமீபம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். உடனடியாக 5 வீடுகளாவது கட்டிக் கொடுக்க வேண்டும். "கயிலாஸ விலாஸ்" என்ற பெயரால் ஓர் வீடுகட்டிக் கொடுப்பதற்கு நான் முதலில் ரூபா 5000 (ஐயாயிரம்) கொடுக்கின்றேன் எனக் கூறினர்.

"காசி க்ஷேத்திரத்தில் துளசி தாஸரின இராமாயணத்தை 12 லட்சம் ரூபாய் செலவில் சலவைக் கற்களில் பொறித்துப் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளது. ஆகவே சேக்கிழார் பெரிய புராணத்தைஅரங்கேற்றம் செய்துள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் புராணங்களையும் சிலாசனம்செய்து பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மதுரை ஸ்ரீ மீனுட்சிகோயில் கும்பாபிஷேகக் கமிட்டித்தலைவரான திரு. பி. டி. ராஜன் அவர்கள் "குருமணிபற்றி எவ்வளவோ பாராட்டுதல்கள் கூறலாம். ஆனுல் குருமணிகளின் அருளாட்சியில் ஆதீனத்திற்குச் சொந்தமான 27 சிவாலயங்களும் சுத்தமாக இருந்துகொண்டு வருகின்றது. அந்தந்த ஆலயங்களிலும் தண்ணீர் தெளித்துக் கற்களில் சோற்றைப் போட்டுச் சாப்பிடலாம், அம்முறையில் கோயில்கள் சுத்தமாகவுள்ளது, இது ஒன்றே குருமணிகளின் பாராட்டிற்குப் போதுமானதாகும். மதுரை ஸ்ரீ மீனுட்சி அம்மன் கோயிலை மகாகும்பாபிஷேகம் செய்து வைத்தோம. ஆனுல் கோயிலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள முடியாமலிருந்து வருகின்றோம. தமிழகத்திலுள்ள எல்லா ஆலயங்களையும் அழகுபடுத்துதல்வேண்டும்; ஆலயங்கள் நல்லமுறையில் இருந்து கொண்டு வந்தாற்ருன் நாட்டிற்கு நல்லதாகும" என்று கூறினுர்.

சென்னை திருமதி சௌந்தரம்கைலாசம் அம்மையார் "குருமணிகளின் அருளாட்சியில் ஆதீனத்திற்குச் சொந்தமான 27 ஆலயங்களும் 27 நட்சத்திரங்களைப்போலவும், குருமணிகள் சமயத்திற்கு தீபம்போலவும்விளங்கிக்கொண்டு வருகின்றுர்க" ளென்று கூறினுர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள விழாவின் முடிவில் ஆசியுரை வழங்குகையில் எல்லா ஆலயங்களிலும் உள்ள கலைகள் தினமும் அர்த்த சாமத்தின்போது இங்கு (தில்லையில்) வந்து ஒடுககமாகின்றனை. அத்துடன் 1 இலட்சத்து 22 ஆயி

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### சமயப் பிரசாரம்

வண்ணுர்பண்ணை தொழில் கல்வி நிலைய மாணவர்களுக்கு 19-10-67 வியாழக் கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை சமயப் பிரசார அமைச்சர் திரு: மு. மயில்வாகனம் அவர்கள் "நற்சிந்தனை" என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினுர்கள். ஷை கல்வி நிலைய மேற்பார்வையாளர் திரு: சிவ. உ. சோமசேகரம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். கல்வி நிலையவதிபர் திரு; அந்தோனி அவர்கள் நன்றி கூறினர்.

# தாயே! அருள்வாய்

" அளவையூர் — சஞ்சீவி "

இராகம் : பைரவி :: தாளம் : ஆதி

பல்லவி

தாயே அருள் வாயே — சரஸ்வதி
சகலகலாவல்லி பரம தயாபரி ( தா )

அநுபல்லவி

ஓயா துன்னை ஓம்சிவ சத்தி என
உச்சரிப்பார்முன்னே நிச்சய மாகவரும் ( தா )

சரணம்

வீணையும் மாலையும் வேதமும் கொண்டே
வெள்ளைத் தாமரைப் பூவில மர்ந்து
வாணி க்ருபாகரி மந்திர வசனி
வந்திடு வாய்கதி தந்திடும் பைரவித் ( தா )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி தெற்கு, வேலன் மூலைகுடி —வழக்காளி
இல. 3305 எதிராக
அல்லாரை,
1. சின்னத்தம்பி பொன்னுத்துரை 2. பெண் தங்கம்மா —எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 3305-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுகட்டளைப்படி, பின்னால் விபரிக்கப் படும் இரு துண்டுக காணிகள 1967-ம் ஆ. நவம்பர் (கார்த்திகை) மீ 27-ந் திகதி (27-11-67) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் முறையே அந்தந்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 5368-ம் இதில் ரூபாய் 4000-க்கு 6-11-66 திகதி தொடக்கம் 20-4-67 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 328-70 சதம்,

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி கச்சாய்க் கோவில்பற்று அல்லாரை இறை "வெல்லுறுவையடியும் சாந்தன் காடும்" நிலப்பரப்பு (12-ம்) பயிர்களும் எல்லை கிழக்கு கணபதி காசிக்கும் சகோதரனுக்குமுரியவாதனம் வடக்கு பொன்னுத்துரை பெண் தங்கம்மாவுக்குரியவாதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு காத்தி பெண் சின்னச்சிக்கும் பொன்னுததுரை பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனம் இதில் தெற்கே நாகம்மாவுக்குரிய காணிக்குப் போகும் பாதை பிறநீங்கலாக மிகுதியடக்கலும்.

2. மேற்படி அல்லாரையிறை "வடக்கு வளவு" நிலப்பரப்பு ஆறு (6-ம்) பயிர்களும் விடுகளும் எல்லை கிழக்கு சின்னததம்பி பொன்னுத்துரைக்கும் மறுபேருககுமுரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை. மேற்கு கணபதி காசிக்கும் சகோதரங்களுக்குமுரிய ஆதனம். தெற்கு குறித்த எதிராளிகளுக்குரிய ஆதனம் இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
தெல்லிப்பழை. 23-9-67. Commissioner & Valuer,
எம். 272 20-10—

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாபநிதி —

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்று வரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J P.
Std. 14 சிறுப்பர்.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு வலந்தலை சயம்பு வீதி அருணசலம் தம்பையா அவர்களிடம் 1965 ம் வருஷம் ஏப்பிரல் மீ 1-ம் (1-4-65) திகதிக்கு முன் அடைவு வைத்து மீட்கப்படாத அடைவுகளை 1967-ம் ஞூ நவம்பர் மீ 8-ந் திகதி (8-11-67) புதன்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
கொமிஷனரும். விலைமதிப்பாளரும்.
M, 263 13, 20-10-67.

"இராசகிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம், 9-10-67.

## தமிழ்நாடு தெய்விகப்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் தேவாரப் பாடல்களும் ஸ்ரீ நடாராஜர் கோயிலில் அடைபட்டிருந்தன. அநபாய சோழமன்னன் நம்பியாண்டார் நம்பியை ஆசாரியராகக் கொண்டு மூவர் தேவாரப் பாடல்களையும் வெளிப்படுத்தி யுள்ளார். அவ்வளவு சிறப்பு வாய்ந்துள்ளது தில்லை க்ஷேத்திரம். ஆகவே சைவப்பெருமக்களுக்கு திருமுறைகள் பெரும் பொக்கிஷமாகும் தமிழன் ஒவ்வொருவனுக்கும் திருமுறைகளே சொத்தாகும். அந்த சொத்தைப் பாதுகாத்துக் கொண்டு வரல் வேண்டும். இறைவனின் அருளைப் பெறவே "தமிழ் நாடு தெய்விகப்-பேரவை" நிறுவப்பட்டுள்ளது. ஆகவே பேரவை நன்கு வளர்ச்சி பெற்று வரல் வேண்டும் என்றும எனக்கு அளித்துள்ள பாராட்டுதல்களும், வரவேற்புகளும் தில்லை ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவடிகளுககும் எங்கள் ஆதீனத்தின் முதல் குருமூர்த்திகளின் திருவடிகளுக்கும் ஏற்றதாகும். நான் இவைகட்குத் தகுதி இல்லாதவன் என்றும்கூறினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமணிகளுக்கு "இந்துசாதனம்" ஸ்தாபனத்தின் சார்பிலும், எமது சிதம்பரம் நிருபர் அவர்களால் வாழ்த்துரை வழங்கப்பெற்றது (ந. கி.)

## விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B. 7304

நவாலி பலநோக்குக் கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கம் மட்டுப்படுத்தப்பட்டது மானிப்பாய். — வழக்காளிகள்
எதிராக
மானிப்பாய் குட்டி கப்பையா —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 7304 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1967-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11-ந் திகதி (11-11-67) சனிக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 1977 சதம் 50. இதில் ரூபா 1500 க்கு 19-3-1965 -ம் திகதி தொடக்கம் 14-10-1965 -ம் திகதி வரைக்கும் 4 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 238 சதம் 25.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்கோவிற்பற்று மானிப்பாய் இறை பெரியபுலம் நிலப்பரப்பு 7, 3/8 செய் பயிர்களும் கிணற்றிற் பங்கும் தூர்வை வழி வாய்க்காலும் பாதையும் எல்லை கிழக்கு வயிரவி கதிரவேலனுக்கும் பெண் மாணிக்கத்துக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு சின்னவன் கப்பனுக்கும் பெண்ணுக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை. தெற்கு சின்னட்டி மாணிக்கத்துக்கும் மற்றவர்களுக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கவில் சொரியலாய் நிலப் பரப்பு நாலும் குழி 11. 1/64 விற்கப்படும். பதிவு இலக்கம் யாழ்ப்பாணம் E 322/72,

ந. ஆறுமுகம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனவாளரும்.
சித்தங்கேணி, 11-10-1967.
(எம் 276 20-10-67)

## விஞ்ஞானக்கல்வியுடன் மனிதவியல் கல்வி

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

மாணவன் ஒவ்வொருவனுக்கும் அடிப்படை விஞ்ஞானக்கல்வியை ஊட்டுவது கடினமான செயலன்று. பயிற்சி வழிகாட்டி முறை (Course Guides) யினைக் கொண்டு இச் செயலை எளிதாக்கலாம். இதற்கு உயர்ந்த தராதரம் பெற்ற ஆசிரியர்களே வேண்டும் என்பதில்லை. சாதாரண ஆசிரியரே போதும். இவ்விடத்தில் ருஷ்யரும், அமெரிக்கரும் கொண்டுள்ள ஓர் உறுதியான நம்பிக்கையை நினைவூட்ட விரும்புகின்றேன். பெரும்பாலும் எல்லோரும் எல்லாத் துறைகளிலும் பயனுள்ள கல்வியைப் பெறலாம் என்பதே, அவர்களின் நம்பிக்கையும், வலியுறுத்தலுமாகும்.

### சமய, கலாசார நிகழ்ச்சிகள்

மகாசிவராத்திரி, நவராத்திரி, திருக்கேதீச்சரத் திருவிழாக்களையும், குருபூசைகளையும் எமது இந்து இளைஞர் சங்கம ஒழுங்குசெய்து திறம்பட நடாத்தியது. சென்ற ஆண்டுபோலவே இவ்வாண்டும் குமாரசுவாமி மண்டபத்திலும், பிரார்த்தனை மண்டபத்திலும் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் சேக்கிழார் விழாவையும், சேக்கிழார் குருபூசையையும் நடாத்துவதற்கு எமது இந்து இளைஞர் சங்கம் உறுதுணையாய் அமைநது உதவியது. இவ்விழாவில் எமது மாணவரால் மேடையேற்றப்பட்ட "சேரமான் தோழர்" என்ற நாடகம் உயர்ந்த தரத்தில் அமைந்து சபையோரின் பாராட்டினைப் பெற்றது. கல்லூரி இசைக் குழுவினர் பண்ணிசைப் பயிற்சியை முறையாகப்பெற்று நாள்தோறும் நடைபெறும் பிரார்த்தனையில் 'பஞ்ச புராணங்களை'யும் சிறப்பாக ஓதி வருகின்றனர்.

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இலக்கம் 8466.
1. கரவட்டி வடக்கு பொன்னையா வயிரமுத்தவும்
2. பெண் செல்லம்மாவும் —வழக்காளிகள்
எதிராக
1. கரணவாய் வடக்கு சின்னத்தம்பி கனகலிங்கம்
2. பெண நாகம்மா
3. சின்னத்தம்பி விசுவலிங்கம் —எதிராளிகள்

மேற்குறிதத இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இகன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1967 ம் ஆ. கார்த்திகைமீ 27-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று 1. கரணவாய் நவிண்டிற் குறிச்சியிறை நெடுங்கேணி இதற்கு, உலாந்தா மேஸ்தர் க. வேல்முருகுவால் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி கில, லா. 10 குளி 16 இதில் குறித்த படத்தில் 2-ம் நம்பர் துண்டுக்கு, கில, லா. 5 குளி 8 இதில் வடக்குப்புறமாக கில. லா 1 எல்லைகிழக்கு ஒழுங்கை, வடக்கு செல்லையா நாகரத்தினத்துக்குடைய வாதனம், மேற்கு தம்பையா கிருஷ்ணபிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு கந்தவனம் பெண் செல்லப் பாக்கியத்துக்குடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் அடக்கலும்,

2. ஷை யிறை நெடுங்கேணி நி பர 10 ஷை நி பர 5, 3/8 இதில் 26 பிறிவு நில பர 5, 3/8 இதில் தெற்குப் புறமாக $\frac{3}{4}$ பங்கில் தென் கிழக்குப் புறமாக நி பர 1-ம் இன்னும் மேற்குப் புறமாக நி பர 2 ம் கூடிய நி பர. 3-ம் நீக்கி மிகுதி ஆட்சிப்படி நி பர 1 குளி 9/16 எல்லை கிழக்கு குருநாதர் வல்லிபுரத்துக்குடைய வாதனம். வடக்கு கதிரித்தம்பி கிருஷ்ணபிள்ளைக்குடைய வாதனம். மேற்கு கீழே சொல்லப்படும் 3-ம் ஆதனம். தெற்கு செல்லையா நாகேந்திரத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

3, ஷை யிறை பெரிய சீமா கொலகொல்லை நி பர $6\frac{1}{2}$ ஷை நி பர 2, 3/8 இதில் கிழக்கரைவாசிக்கு நி பர 4 குளி 7 7/8 எல்லை கிழக்கு மேற்சொல்லிய 2 ம் ஆதனம். வடக்கு கந்தவனம் பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு கனகசபை கைம்பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு சோமசுந்தரம் நாகேந்திரத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம் இதடங்கலிற் சொரியலாய் $\frac{1}{2}$ பங்கும்.

4. ஷை யிறை இலந்தை யடி சீமா வீடு 1 நி பர, $1\frac{1}{4}$ கூடிய நி பர 2 குளி $10\frac{1}{2}$ எல்லை கிழக்கு மேற் சொல்லிய 2-ம் ஆதனம் வடக்கு கதிரித்தம்பி கிருஷ்ணபிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு சோமசுந்தரம் இராமலிங்கத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு செல்லையா நாகேந்திரனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தில் சொரியலாய் நி பர 2 குளி $7\frac{1}{2}$ அதைச்சேர்ந்தவைகளைத்தும்.

5. ஷை யிறை பெரியசீமா நி பர 15 இதில் தெற்கரைவாசியில் தற்கால ஆட்சிப்படி கிழக்குப்புறமாக 1/3 பங்குக்கு நி பர 4 இதில் தெற்குப்புறமாக 5/16 பங்குக்கு நி பர $1\frac{1}{4}$ எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு தம்பையா கிருஷ்ணபிள்ளைக்குடையவாதனம். மேற்கு கதிரித்தம்பி கிருஷ்ணபிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் தெற்கு கந்தசாமி பெண் தங்கத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கல்வீடு அடங்கலும்.

| | | |
|---|---|---|
| தாட்சித் தொகை | ரூபா | 4578-32 |
| ரூபா 3000/-க்கு 30-12-64 தொடக்கம் 25-10-65 வரை 10 வீத வட்டி | ரூபா | 162-18 |
| செலவு | ரூபா | 240-01 |
| மொத்தம் | ரூபா | 4980-51 |
| கொடுபட்ட தொகை | ரூபா | 3000-00 |
| மிகுதி | ரூபா | 1980-51 |
| ரூபா 1980-51-க்கு 8-9-67 வரை 5 வீத வட்டி | ரூபா | 74-00 |
| மொத்தம் | | 2054-51 |

வடலிப்பாதி, தும்பளை,
பருத்தித்துறை,
15-10-1967.

ஆ. சபாரத்தினம் J. P.
கொமிசனரும விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்,
எம் 275 20—10—

## திருகோணமலை பிரடரிக்கோட்டையும் அருள் மலையும்

திருகோணமலை பிரடரிக் கோட்டையி லுள்ள கோணேசர் ஆலயத்தைச் சேர்ந்த அருள்மலையும் பாவநாசத் தீர்த்தமும் அமைந்த பிரதேசங்கள் கோணேசுவர ஆலய பரிபாலன சபையாரிடம் ஒப்படைக்கப் பெறுமென அறியக் கிடக்கின்றது. அருள் மலையைச் சுற்றியுள்ள இராணுவப் படைவீரரும் அகற்றப்படுவாரெனவும் ஷெ ஆலய பரிபாலன சபைத் தலைவர் தெரிவிக்கின்றனர்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல. M B 3634

நாகலிங்கம் கைம்பெண் விசாலாட்சி கொட்டடி யாழ்ப்பாணம்.
—வழக்காளி.

எதிராக

நாகநாதி சிதம்பரப்பிள்ளையும் பெண் பொன்னம்மாவும் தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 3634-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1967 ம் ஆ கார்த்திகை மீ 18 ௳ சனிக்கிழமை முற் பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 3500-ம் 2-9-60 தொடக்கம் 15-2-61 வரைக்கும் ரூபா 3000 -க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 482–90. இதில் வட்டியால் 3–5–63 -ல் 500 ரூபாவும் 12–6–64 ல் 500 ரூபாவும் கோட்டுச் செலவால் 125 ரூபாவும் கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோயிற்பற்று தெல்லிப்பளைகிழக்குஇறை 'கிளாலை' நில பர 10. இதில் மேற்குப் புறமாக விற்ற நில பர. 3 நீக்கி மிகுதி நில பர 7ம் அதற்குச் சேர்ந்தவைகளும். இந்த பர. 7 -க்கும் எல்லை கிழக்கு வடக்கு தெற்கு ஒழுங்கை மேற்கு இதன் மிகுதி ஆதனம். இந்த நில. பர. 7, H 321/99ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இ. சு. தர்மரத்தினம்
Commissioner & Valuer.
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
பெருங்காடு, புங்குடுதீவு
13—10—67.
எம். 280 20-10-67

---

## பிழை திருத்தம்

அதை இப்படி வாசிக்கவும்.

13–10–67 -இல் வெளிவந்த 'இந்துசாதனம்' இதழில் M. B. 3791 இலக்க கோட்டு விற்பனவு விளம்பரத்தில் காணிவிபரம் என்னும் பகுதியில் வடக்கெல்லைக் குள்ளிருக்கும் கிணற்றில் என்றிருப்பதை 'வடக்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில்' ... என்று திருத்தி வாசிக்குக.

தவறு நேர்ந்தமைக்காக வருந்துகின்றோம், — ஆசிரியர்,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோடு

1. சுப்பையா குணரத்தினம்
2. பெண் புஸ்பமணி உரும்பிராய் —வழக்காளிகள்

இல, எம். பி. 5734 எதிராக

1. தம்பையா குலசிங்கம்
2. பெண் கணேசம்மா. உடுவில். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 5734 ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1967-ம் ஆ. மார்கழி மாதம் 10-ந் திகதி (10–12–67) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9–30 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக 10,455/- ரூபாவும் 4-5-65 ற்குமேல் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் நூற்றிற்கு ஐந்துவீத வட்டியும் செலவு ரூபா. 344-10 சதமும் (ஏற்பட்ட செலவு 222-45, வெளிபாததுச் செலவு 60–30, இனிமேலேற் படுஞ் செலவு 61–35)

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் குறிச்சியும் இறையும் "பறையன்காடு" பர. வி லா. 8 குழி 10 18/353 கல்வீடும் வான்பயிர் செய்பயிர்களும், கிணறும் தென்மேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும், தென்மேற்கெல்லைக் காணியின் மேற்குப்பக்கமாக இக் கிணற்றிற்குப் போகும் பாதைப் பாவிப்புருத்தும் தார்வையுரித்தும். இதற்கெல்லை கிழக்கு கையொழுங்கை, வடக்கு ஒழுங்கையும், முரூகேசு ஆறுமுகம் பெண் குட்டிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள், மேற்கு வேலாயுதர் கைம்பெண் சின்னச்சிக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுடைய வாதனங்கள், தெற்கு மேற்கூறிய பாதை முகப்பும் வேலாயுதர் பொன்னையாவினுருமைக் காறருக்குமுரிய வாதனம் இது முழுவதும் இதைச் சேர்ந்தவைகளும்

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28 / 1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். M 274 20-10-67

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இரண்டாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்

1. முருகேசு கிறிஷ்ணபிள்ளையும்
2. பெண் விமலாதேவியும் —வழக்காளிகள்

இல. M B. 7031 எதிராக

அரியாலை யாழ்ப்பாணம்

1. கணபதிப்பிள்ளை சரவணமுத்துவும்
2. பெண் ருஜேஸ்வரி சரவணமுததுவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B. 7031-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1967-ம் ஆ. கார்த்திகை மாதம் 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10–00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 7565/ ம் 6–11–64 தொடக்கம் 20-12–65 வரைக்கும் ரூபாய் 5000/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 334/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெரு இறை "கூளுநாரிபுலம்" பர. வில இலா. 4 15, 1/16 குளி விடு செய்பயிர் வான்பயிர்களுடன் மற்று மதைச் சேர்ந்தவைகளும். இதற்கெல்லை கிழக்கு முத்தையா ஐயாத்துரையினுதனம, வடக்கும மேற்கும் ஒழுங்கை, தெற்கு சின்னத்தப்பி அருணாசலம் மகள் கணேஸ்வரியினுதனம். பதிவிலக்கம் D 242/171

133 பருத்தித்துறை ரோட்டு, செ. விசாகரெத்தினம்,
நல்லூர், யாழ்ப்பாணம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
22-9-67. M. 271. 20—10—67

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வே. கதிர்காமு கந்தையா காரைநகர் கிழக்கு — வழக்காளி

இல. M B. 8307 எதிராக

1. கந்தையா பொன்னம்பலம், மனைவி 2. இராசம்மா காரைநகர் கிழக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 8307–ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுககட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1967–ம் ஆ மார்கழி மீ 10-ந் ௳ ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 2255/00 ம் 19-7–1966 தொடககம 22-11-1966 வரைகரும் ரூபாய் 1500/00–க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 258-00.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவில்பற்று காரைதீவு இறை "திக்கரை" உறுதிப்படி நிலப்பரப்பு 25 ஆனால் அளவின்படி நிலப்பரப்பு 21 குளி 5, பனைகளும் வடலிகளும் வீடுகளும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு உறுதிகொடுப்பவர்களின் ஆதனம வடககு சின்னையா இராசரத்தினததற்கும். வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும், கந்தர் கணபதிப்பிள்ளைக்கும், வேலுப்பிள்ளை ஆறுமுகத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு சுப்பிரமணியம் கைம்பெண் சிவகாமிப்பிள்ளையினுதனம். தெற்கு வேலுப்பிள்ளை பெண் சுந்தரிக்கும் கந்தர் பெண் கதிராசிக்கும் தம்பிப்பிள்ளை முருகேசருக்குமுரியவாதனம். இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 9 குளி 17–ம் இதற்குச் சேர்ந்தவைகளும்.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவில்பற்று காரைதீவு இறை "ஆல்நின்ற புலமும், பனைநின்றதிலும், தோட்டககாடும், பீச்சுலாந்தியடைப்பும்" பரப்பு நிலை 75 பனை வடலிகளும் தென்னைகளும் மற்றும் பயிர்களும் வீடும் கிணறும் இதற்கெல்லை கிழக்கு சபாபதி பெண் அன்னபூரணத்திற்கும தம்பிப்பிள்ளை பெண் இராசம்மாவிற்கும் மறுபேருக்குமுரியவாதனம் வடக்கு முருகேசு பேரம்பலததிற்கும் மறுபேருககும் ஒழுங்கை முகப்பும் சண்முகம் கைம்பெண் முத்துப்பிள்ளைக்கும். மேற்கு வெற்றிவேலு ஆறுமுகத்திற்கும் சுந்தரம்பிள்ளை சோமசுந்தரத்திற்கும் பங்காளருககுமுரிய ஆதனங்கள். தெற்கு அருணாசலம் வேலுப்பிள்ளைக்கும் கந்தையா பெண் கதிராசிக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் 1/3 பங்கும். அதற்குச் சேர்ந்தவைகளும்.

கமலபதி, மு. நவரத்தினராசா.
ஆஸ்பத்திரி வீதி, 2—10 67 கொமிசனரும் விலைமதிப்பாளரும்
மண்டைதீவு எம், 267, 13—10—)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்: முருகேசு இளையதம்பி கனகசபை —வழக்காளி

இல. M B. 8168 எதிராக

தெல்லிப்பளை கிழக்கு: 1. கிருஷ்ணபிள்ளை சதாசிவமும்,
2. பெண் தங்கமணியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 8168-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுககாணியை 1967–ம் ஆ. மார்கழி மீ 20-ந் ௳ புதன்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் வற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல வட்டி ரூபாய் 4063/-ம் 16-5-66 தொடக்கம் 31–1–67 வரைககும் ரூபாய் 2500-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுந்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 280—97.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளை கோயிற்பற்று தெல்லிப்பளை கிழககு இறை "அழகுசீமா" நில. பர 6-ம் கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் தார்வையில் பங்கும் பயிர்வகைகளும். எல்லை: கிழக்கு கால் அடிப் பாதை வடககு நாகமணி கைம்பெண் மூத்ததங்கத்தின் ஆதனம், மேற்கு தம்பிமுத்து கந்தையாவின் ஆதனம். தெற்கு ஒழுங்கை, இதடங்கலும் காணிக் கந்தோரில் H 207/123–ம் இலககத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

22, கோவில் வீதி, நீ. அன்ரனிப்பிள்ளை,
யாழ்ப்பாணம். கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம். 278 20—10— )

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

1. மட்டுவில் தெற்கு சபாபதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணனும்
2. பெண் மகேஸ்வரியும் — வழககாளிகள்

இல. 2896 எதிராக

சாவகச்சேரி இராமலிங்கம் கைம்பெண் நாகம்மா —எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2826 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக்கட்டளைப்படி, கீழ்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படும் ஆதனம் 1967-ம் ஆண்டு மார்கழி மீ 13-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அககாணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—ரூபா 2468/75 சதமும் 19-6-64 தொடக்கம் 10-12-64 வரையும் ரூபா 1250/–கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறுககுமவரையும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 264/25 சதமும் இதில் செலவு வகையால் கொடுபட்ட ரூபா 100/ வழக்கில் கட்டிய ரூபா 1000–மும் கழித்து மிகுதி.

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக்கோவில்பற்று சாவகச்சேரி இறை 'கிளைவன் வளவும், பறையன் வளவும், தோப்பு வளவும்" வி. பர. 34½ ஆட்சிப்படி நீ. பர. 36 இதில் தென்மேற்குப் பக்கமாக நீ. பர. 10 பத்துககு எல்லை: கிழக்கு வல்லிபுரம் பெண் வள்ளியம்மைக் குரிய வாதனம், வடக்கு வல்லிபுரம் பெண் காசிப்பிள்ளைக்கும், நாகமணி பெண் அன்னம்மாவுக்குமுரியவாதனக்கள், மேற்கு பொன்னையா கைம்பெண் இராசம்மாவுக்கும் பிள்ளைகளுககுமுரியவாதனம் தெற்கு சின்னப்பு கைம்பெண் மங்களத்துக்குரியவாதனம் இவ்வெல்லைக்குட் சேர்ந்த நிலம் பனைகள் பயிர்கள் அடங்கலும் பதிவு F. 168/258

நுணுவில் மேற்கு, செல்லையா குமாரசிவம்,
சாவகச்சேரி, 16–10-1967. கொம்மிஷனர்.
எம். 217 20-10-67

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இணுவில் காசிப்பிள்ளை சின்னையா — வாதி

இல. 1293 / T. எதிராக

1. பராயமற்ற இணுவில் நடராசா சண்முகநாதன் (பராமரிப்புக்காரி)
2. இணுவில் நடராசா கைம்பெண் விசாலாட்சிப்பிள்ளை —பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் T. 1293-ம் இலக்க உருமைத தத்துவ வழக்கில் எனககுக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்காணும் ஒரு துண்டுக் காணியை 1967-ம் ஆ நவம்பர் (கார்த்திகை) மீ 23-ம் திகதி வியாழக்கிழமை (23-11-67) முற் பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவில் பற்று இணுவில இறை "வததுவினி" நில பர 7 குளி 10·5(10½) வடககு மூலையிலிருக்கும் கிணற்றுப்பங்கும் தார்வைப் பங்கும செய்பயிர் வான்பயிர்களும் இதிற் சொல்லிய நிலப்பரப்பு 7 ம் 10·5 குளியும் 1965-ம் ஆண்டு ஆடி மாதம் 16-ம் திகதி உலாந்தா திரு. கே. ஐயாறு அவர்களால் உண்டாக்கப்பட்ட 470-ம் இலக்கப்படத்தில் காட்டப்பட்டது எல்லை கிழக்கு கந்தையா பொன்னுத்துரைக்கும் கறுவல்தம்பி இராசலிங்கத்துக்குமுரியவாதனம் வடககு ஒழுங்கை மேற்கு கந்தையா அருளம்பலத்தின் ஆதனம் தெற்கு மாணிக்கம் இளையதம்பி கனகலிங்கத்துக்கும் அமெரிக்கன் மிஷனுக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

S. இரத்தினசபாபதி, J. P.
ஸ்ரேசன் ரோட், கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்,
கோண்டாவில், 17–10–67. (எம். 284 20–7–67 )

---

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால் 20—10—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்,